1974 சனவரி 23]

ஏடூர் அரிசனக் காலனியில் மேல்நிலைக் குடிநீர்த்தொட்டி

*73 வினு—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், ஏடூர் அரிசனக் காலனியில் மேல்நிலைக் குடிநீர்த் திட்டம் அமைக்கும் பணி எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: கும்முடிப்பூண்டித் துணை வட்டம், ஏடூர் அரிசன காலனியில் மேல்நிலைக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றும் பொருட்டு முதலில் குழாய்க்கிணறு நடப்பு ஆண்டிலேயே அமைக்க செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தேவையான நடவடிக்கை எடுத்துள்ளார்.

திரு. கா. வேழவேந்தன்: இந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து, இந்த ஆண்டு இறுதிக்குள் திட்டம் நிறைவேறுவதற்கு சிறப்பு ஆணை பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: முதலில் ஒரு போர் வெல் போட வேண்டும் என்று கலெக்டர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதற்கு ரூ. 5,000 செலவு ஆகும். அதற்கான தண்ணீர் கிண்டி இன்ஸ்டிட்யூட்டிற்கு பரிசோதனைக்காக அனுப்பபட்டு பரிசோதனை முடிந்தவுடன் இந்த குடிநீர் மேல்நிலைத் தேக்கத் தொட்டி கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, இந்தத் தண்ணீர் கிண்டி இன்ஸ்டிட்யூட்டிற்கு எப்பொழுது அனுப்பப்பட்டது? அங்கிருந்து பதில் எப்பொழுது எதிர்பார்க்கப்படுகிறது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அதைப்பற்றிய விவரம் தற்பொழுது இல்லை.